
வடக்கு - கிழக்கு மாகாணம்

# தமிழ் இலக்கியப் பெருவிழா - 2003

ஒக்டோபர் - 19



## ஆளுநர் விருது பெறுவோர்

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி
ஏ.ஜே. கனகரட்னா
ராஜு மாஸ்ரர்
பாவலர் பஸீல் காரியப்பர்
வில்லிசைக் கலைஞர் க.நா. கணபதிப்பிள்ளை
சண்முகம் சிவலிங்கம்
கலைஞர் கு. கணபதிப்பிள்ளை
மு. பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாணம்

# தமிழ் இலக்கியப் பெருவிழா - 2003

## ஒக்டோபர் - 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத பூஷணம் என். ராஜு மாஸ்டர்

கலாநிதி, துர்க்கா துரந்தரி
தங்கம்மா அப்பாக்குட்டி

கலாபூஷணம் கலைஞர் சு.கணபதிப்பிள்ளை

வில்லிசைக் கலைஞர்
க.நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி)

கவிஞர். சண்முகம் சிவலிங்கம்

திரு. மு. பொன்னம்பலம்

திரு. ஏ. ஜே. கனகரட்ணா

பாவலர் பஸீல் காரியப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர். தியாகலிங்கம்,
செயலாளர்.

கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார
அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.

## ஆசியுரை

"நாமும் நமக்கென்றோர் நலியாக்கலை உடையோம்" நம் நாட்டு நலியாக் கலைகளை வாழும்படிக்கு உயர்த்தி வைக்கும் தமிழ்க் கலைஞர்கள் நலிந்து போகாதிருக்க, அவர்கள் வாழ்வு மலைமேல் விளக்காய் ஒளிர வகைசெய்தல் நமது கடனாகும். அக்கடமை எமக்கான ஒரு அழியா விதிபோற் தலைமேல் கொண்டோம்.

ஆண்டு தோறும் தமிழுக்கும், தமிழ்க்கலைக்கும் விழா வெடுக்கும் போது அதனோடு இணைந்த பணியால் அத்தகைய நலியாக்கலை படைத்தளிக்கும் கலைஞர்க்கும், அறிஞர்க்கும், ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கின்றோம்.

எமது வடக்கு கிழக்கு வாழ் தமிழ்க்கலைஞர்களுக்கு நாம் வழங்கும் கௌரவம் நம்மை நாமே கௌரவிப்பது போலாகும். நாம்வேறு நலியாக் கலைஞர் வேறல்லர். எனவே வாழும்போதே கலைஞரைக் கௌரவித்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்ந்து தமது மண்ணுக்கும் மக்களுக்கும் பணியாற்ற ஆசிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீ.ஏ.மோகன்றாஸ்**

**பணிப்பாளர்,**

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருக்கோணமலை.**

## வாழ்த்துரை

தமிழ் இலக்கிய விழா என்பது தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழ்மொழி பேசும் மக்களின் கலாசார வடிவங்களையும் அடையாளப் படுத்துகின்ற ஒரு நிகழ்வாகும். இந்நிகழ்வில் தாய்மொழியின் வளர்ச்சிக்காக உழைப்போரையும், பண்டைத் தமிழ் கலைமரபைப் பேணி நிற்போரையும், புதிய கலைவடிவம் செய்வோரையும் பாராட்டிக் கௌரவிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். தமிழ்த் தாயின் அரும்புதல்வா்களாய் வடக்கு கிழக்கின் பல்வேறு மாவட்டங்களிலும் கலை இலக்கியச் சேவையை தம் உயிரினும் மேலாய் போற்றிப் பணிபுரியும் இச்செம்மல்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அடையாளப்படுத்திக் காட்டுவதில் பேருவகை கொள்கின்றேன்.

இவ்வருடம் விருது பெறும் இவ் எண்மரும் ஒவ்வோர் துறையில் தமக்கென முத்திரை பதித்தோரே, சமூகம், இலக்கியம், இசை, நாடகம், வில்லிசை, கூத்து என தாம்சார்ந்த துறைகளில் நெடுங் காலம் சேவையாற்றி இலக்கிய உலகின் கணிப்பைப்பெற்ற இவர்கள் சேவை சேனுயர் தேசமெங்கும் சென்றடைய வேண்டுமென மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என். ஸ்ரீதேவி,**
**உதவிப் பணிப்பாளர்.**

**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார**
**அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்,**
**திருக்கோணமலை.**

# விருதுக்குரியவர்களை வாழ்த்துகின்றோம்

செந்தமிழாளர்,
சிறந்த நல்லறிஞர்,
பைந்தமிழ்க் கவிஞர்,
பயன்நெறிக் கலைஞர்,
எங்கள் நடுவில் இருந்தனர், சிறந்தவர்,
அங்கவர்க்கெல்லாம் ஆளுநர் விருது தந்திடும்
நல்ல தகைசார் பணிகள் தலைமேற் கொண்டோம்.
தளர்விலா நல்ல முதுசொம் கொண்ட
முதறிஞர்க்கு விலையொன்றில்லை.
ஆயினும் இவ்விருதினால் நாமே நம்மை
நமதருந் தமிழை கௌரவப்படுத்தி நிற்கின்றோம்.
காதலால் கண்ணின் நீர் பனிக்க கைகூப்பி
வாழ்த்துகின்றோம். வாழ்க நல்விருதாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழால் அழும் ஓசை கேட்க வேண்டும்
ஓடையிலே என் சாம்பர் கரையும்போதும்
ஒண் தமிழே சலசலத்து ஓட வேண்டும்."

என்று பாடிய ஈழத்துக் கவிஞர் பண்டிதர் சச்சிதானந்தனின் பாட்டொலி இன்று தேசமெங்கும் ஒலித்துத் தமிழ் வளர்ப்பதற்கு உரமூட்டிக் கொண்டிருக்கிறது.

ஈழத்தில் ஒலித்த போர் முழக்கங்களால் சிதறடிக்கப்பட்டுச் சிதறிப் புலம்பெயர்ந்தவர்கள் இன்று உலகின் பல நாடுகளிலும், தமிழ் வளர்த்துத் தமிழ் தேசத்தின் பெயரால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வாழுந் தமிழை வளர்ப்பவர்கள் ஈழத்தவர் மட்டுமென்றில்லாது ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் பரவிச்சென்று அங்கெல்லாம் தமிழ் முழக்கம் செய்து உழைத்துக் கொண்டிருப்பவர்கள் வாழும்வரை "இனிமைத்தமிழும் என்றும் வாழும்" என்றே எம் செவிகளிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், கலைத்துறையின் செழுமை விருத்திக்கும் உழைத்துவரும் எம்தேச மக்களின் கலை, இலக்கிய, கல்விப் பணிகளை மறந்துவிடாது இருப்பதற்காகவும், அவர்களை எமது இனம் நன்றியுடன் நினைவு கூர

**வல்வை. ந. அனந்தராஜ்,**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
விழாக்குழு சார்பில்.

**மாகாணக் கல்வித் திணைக்களம்.**
**வடக்கு கிழக்கு மாகாணம்**
**திருக்கோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதற்காகவும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு ஆண்டுதோறும் தமிழ் இலக்கியப் பெருவிழாவையும் அதனூடாகக் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வையும் நடத்தி வருகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு தோற்றுவிக்கப்பட்ட பின்னர் 5வது தடவையாக நடைபெறும் கலைஞர்கள், மற்றும் தமிழுக்குத் தொண்டாற்றுபவர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி நடைபெறுகின்றது. வாழும் எம் மொழிக்கு வளம் சேர்க்க உழைக்கின்ற வடக்கு கிழக்கு மாகாணத்தின் அறிஞர்களும், கலைஞர்களும் கௌரவிக்கப்படும் அந்த நாள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் ஒரு நன்னாளாகும்!

அந்த வகையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் கலை, கல்வி, ஆக்க இலக்கிய துறைக்காக அரும்பணியாற்றி வருபவர்களில் **எட்டுக் கலைஞர்கள் 2003இல் தெரிவு செய்யப்பட்டு, ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.** அவர்கள் இன்னும்பல ஆண்டுகள் வாழ்ந்து இந்த மண்ணுக்கும், தமிழ்த் தாய்க்கும் கலை இலக்கிய உலகுக்கும் அரும்பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

2003ஆம் ஆண்டில் வவுனியாவில் தமிழ் இலக்கியப் பெருவிழாவைச் சிறப்பாக நடத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்து இம் முயற்சியில் உழைத்துவரும் கல்விச் செயலாளர் திரு. இ. தியாகலிங்கம், அவர்களும் புதிதாகப் பணியேற்றுத் துடிப்புடன் செயற்படும் பண்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் திரு. சீ.ஏ. மோகன்றாஸ் அவர்களும் நன்றிக்குரியவர்கள் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கீத பூஷணம்**
**என். ராஜு மாஸ்டர்**




**1924**ஆம் ஆண்டில் தமிழகத்தின் கும்பகோணத்தில் பிறந்த ராஜு மாஸ்டர் அவர்கள், இயல்பாகவே அமையப்பெற்ற குரல் வளத்தால் உள்ளூர் இசைவாணரிடம் "சாஸ்திரிய இசையை" முறைப்படி பயின்று, அந்த இசைத்துறையின்மீது கொண்ட பற்றுதலின் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'சங்கீத பூசணம்' பட்டத்தைப் பெற்று முதலாந் தரத்தில் சித்தியடைந்த பெருமைக்குரிய மாணவனாகப் புகழப்பட்டார்.

1952இல் இலங்கை வந்த என். ராஜு மாஸ்டர் அவர்கள் மட்டக்களப்பில் ஆசிரிய சேவையில் தன்னை இணைத்துப் புகழ் பெற்ற இசை ஆசிரியராக விளங்கினார்.

இவர் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்திலேயே 1954இல் அங்கேயே மணம்புரிந்து மட்டக்களப்பினைத் தனது புகுந்த இடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டு மட்டக்களப்பின் இளந்தலை முறையினரிடையே இசை ஆர்வத்தை வளர்த்து வந்தார்.

மட்டக்களப்பிலேயே 24 வருடங்கள் தொடர்ச்சியாக ஆசிரியப்பணியாற்றி வந்த வேளையில், ஈழத்தின் பல இடங்களிலும் சென்று சாஸ்திரிய இசை நிகழ்ச்சிகளை நடத்தி, ஈழத்துத் தமிழர்களிடையே நல்ல தமிழிசையைப் பரப்பும் வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தார்.

அவரது இசைத்துறை வாழ்வில் பல கலைஞர்களை உருவாக்கி வந்ததுடன், தனி நிகழ்ச்சியை நடத்தக்கூடிய இசை வல்லுனர்களையும் உருவாக்கி வந்தார். அவரால் உருவாக்கப்பட்ட மாணவர்களில் 'முழக்கம் முருகப்பா' குறிப்பிடத்தக்க ஒரு மறைவாணர். அவரது 24 வருட ஆசிரியப்பணியின் பின்னர், மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இசைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி இசைத்துறையில் நுழையும் இளம் ஆசிரியர்கள் மத்தியில் இசையின் மகத்துவத்தைப் பிரபல்யப்படுத்தி வந்தார்.

1980களில் சில அரச அலுவலகங்களின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட மாதம் ஒரு மாலை நேரத்துச் சங்கீதப் பொழுதில் பல்வேறு இராகங்களையும் விஸ்தாரமாகப் பாடியும், விளக்கியும் அவற்றின் பண்களின் நுட்பங்களையும் எடுத்துக் கூறியும் வந்தமை இவரது இசைத் துறை சார்ந்த பொற்காலம் எனலாம்.

அவரது இசைத்துறைப் பணிக்காக இலங்கை கலாசாரத் திணைக்களம் "கலாபூசணம்" விருது வழங்கிக் கௌரவித்தது. மட்டக்களப்பில் இசைத்துறை வளர்ச்சியடைந்து தெருவெல்லாம் இசை முழக்கம் கேட்பதற்கு காரண கர்த்தாவாக இருக்கும் ஒரு சில இசை மேதைகளில் சங்கீத பூசணம் என். ராஜு மாஸ்டரும் ஒருவராக இன்றும் பேசப்படுகின்றார்.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக கல்வித்துறையிலும், சாஸ்திரிய இசைத் துறையிலும் அரும்பணியாற்றி வரும் **சங்கீதபூஷணம் என் ராஜு மாஸ்டர் அவர்களைக் கௌரவிக்குமுகமாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினால் 2008ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி, துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி**




**சை**வத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றுவதற்கென்றே யாழ்ப்பாணம், தெல்லிப்பளையில் 7.1.1925ல் பிறந்த இவர் மிக இள வயதிலேயே பண்டிதைப் பட்டம் பெற்று ஆசிரியப் பணியை கல்வி ஒளி பரப்பியவர்.

சைவத்தையும் தமிழையும் வளர்க்கவேண்டும் என்ற பெரு நோக்கில் சிறந்த சமயச் சொற்பொழிவாளராகத் திகழும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவசமய வழிபாட்டில் கொண்ட பற்றுதலின் காரண மாக தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாக முறைமையிலும், ஒழுங்குகளைப் பேணுவதிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வந்தார். அவரது உண்மையான பக்தியும், சமூக சேவை உணர்வும் ஆகம நெறிகளைக் கடைப்பிக்கும் பாங்கும் அவரால் நிர்வகிக்கப்பட்டுவரும் துர்க்கை அம்மன் ஆலயத்தை பிரபல்யமடையச் செய்து பக்திபூர்வமான ஒரு சூழ்நிலை உருவாவதற்கு வழிவகுத்தது.

ஆன்மாக்களின் மன ஒடுக்கத்திற்கும் அமைதிக்கும், ஆலயங்கள் வழிபாட்டிடமாக மட்டுமல்லாது அறிவையும் கல்வி கலைகளையும் வளர்க்கும் சமூக நலன் பேணும் நிறுவனமாகவும் உயிர்த்துடிப்புடன் விளங்கவேண்டும் என்ற நோக்கில் சைவத்தமிழ் ஆய்வு நூலகம், சிவத்தமிழ்ச்செல்வி அன்னை இல்லம் ஸ்ரீ துர்க்காதேவி அன்னசத்திரம், ஆதரவற்ற பெண்களின் கலை கல்வி மேம்பாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணும் "துர்க்காபுரம் மகளிர் இல்லம்" ஆகியவற்றை நிறுவிச் சிறப்புடன் நிர்வகித்து வருகின்றார்.

இவரது தூய்மையான சுயநலமற்ற பக்தி நிறைந்த சமய, சமூகத் தொண்டுகளைக் கௌரவிக்கும் வகையில் துர்க்காதுரந்தரி என்ற பட்டமும் 1991ல் சமூக சேவைகள் அமைச்சினால் "கலாசூரி" என்ற பட்டமும், இவரது சமயக் கல்விப் பணிகளைக் கௌரவித்து 1998 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால், "கலாநிதி" பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு போன்றவற்றில் கலந்துகொள்ள இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து பயன்மிகு சொற்பொழிவுகளை ஆற்றிப் பல அறிஞர்களினதும் பாராட்டையும் பெற்றவர் சென்ற நாடுகளில் எல்லாம் சிறப்பாக கௌரவிக்கப்பட்டவர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1965இல் இவர் ஆற்றிய சொற்பொழிவின் ஆழத்தையும் புலமையையும் பாராட்டி மதுரை ஆதீனத்தால் "செஞ்சொற் செம்மணி" என்னும் பட்டம் வழங்கப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் அவ்வப்போது ஆற்றிய சொற்பொழிவுகள் நூல்களாக வெளியிடப்பட்டு சமய ஆய்வாளர்களினாலும், உயர் கல்வி மாணவர்களாலும் ஆய்வுக்குரிய ஆவணங்களாகவும் பேணப்பட்டு வருகின்றன.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக துர்க்கா தேவஸ்தானத்தின் தலைவியாக இருந்து ஆற்றிவரும் சமய, சமூக பணிகளுக்காக **கலாசூரி துர்க்காதுரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைக் கௌரவிக்குமுகமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினால் 2003ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கலைஞர்
சு.கணபதிப்பிள்ளை




**வீ**ரம் விளையும் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிய வளையில் 04.08.1932இல் பிறந்த கலைஞர் சு.கணபதிப்பிள்ளை தனது ஆரம்பக் கல்வியை முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கற்றார்.

இவரது குடும்பம் மூன்று தலைமுறை அண்ணாவிமாரைக் கொண்டது. சிறுவயதிலேயே இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். நாடகக் கலையின் மீது இவர் கொண்ட ஈடுபாட்டையும் ஆற்றலையும் கண்டு மகிழ்ந்த கலையரசு. க. சொர்ணலிங்கம் அவர்களால் "நாடகக் கலைமேதை" என விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். பண்டாரவன்னியன் நாடகத்தில் பண்டாரவன்னியன் பாத்திரமேற்று நடித்ததன் மூலம் நாடகத்துறையில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டவர். அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான நாடகங்களையும் அரங்கேற்றயவர்.

1948இல் "பால்யகான நாடகசபா" என்ற கலைத்துறை சார்ந்த நிறுவனத்தை நிறுவி அதனூடாக நாடகத்துறையை வளர்த்து வந்தவர். நாடகக் கலையுடன் மிருதங்கம், தவில் போன்ற தோல் வாத்தியக் கருவிகளையும் இலாவகமாகக் கையாளும் திறன் பெற்றிருக்கும் கலாபூசணம் சு. கணபதிப்பிள்ளை அவர்கள் மறைந்த நாதஸ்வரக் கலைஞர் அளவெட்டி என். கே. பத்மநாதன், கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி போன்றவர்களுக்கு தவில் வாசித்து இணைப் பெருமை பெற்றவர்.

கலை பண்பாடுகளை வளர்க்கும் முள்ளியவளை இயல், இசை, நாடக மன்றத் தலைவராக இருந்து கலை உலகிற்கு அரும்பணியாற்றி வருகின்றார். முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியின் போசகராகவும் இவர் இருந்து இளங் கலைஞர்களை வழிநடத்தி வருகின்றார்.

நாடகத்துறை, இசைத்துறை மட்டுமல்லாது எழுத்துத் துறையிலும் இவரது பணி சிறந்து விளங்குகின்றது. மெய்கண்ட தேவரின் "சிவஞான போதத்திற்கு சுத்த மெய்கண்ட அத்துவித சைவசித்தாந்த சிவஞான போதம்" என்னும் பெயரில் தூய தமிழில் உரை எழுதி, 1983இல் வெளியிட்டு வைத்துள்ளார்.

தமிழகத்தின் புகழ்பெற்ற சிறந்த இசைக்கலைஞர்களான சீகாழி எஸ். கோவிந்தராஜன், திருச்சி லோகநாதன், டி.எம். சௌந்தரராஜன் போன்றோராலும் தமிழக நாடக நடிகர்களான ஆர்.எஸ். மனோகர், எஸ். தங்கவேலு ஆகியோராலும் சிறந்த நடிகர் எனப் பாராட்டப்பட்டவர்.

இவரது கலைத்துவத்தை பாராட்டி கலாசார அமைச்சினால் இவருக்கு கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் பல்வேறு மக்கள் நிறுவனங்களாலும் "மக்கள் கலைமணி" மிருதங்க தவில் லய ஞான வித்தகர்" " பல்கலைக்குரிசில்" எனப் பல விருதுகளையும் பெற்றவர்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நாடகத்துறை, இசைத்துறை, எழுத்துப்பணி எனப் பரந்துபட்ட பல்துறை சார்ந்த பணிகளை ஆற்றிவரும் **கலாவித்தகர் கலாபூசணம், கலைஞர். சு.கணபதிப்பிள்ளை அவர்களின் சேவைகளைக் கௌரவிக்கு முகமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் 2003ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிசைக் கலைஞர்

க.நா. கணபதிப்பிள்ளை

(சின்னமணி)




**பல** நாட்டுக் கூத்துக் கலைஞர்களை உருவாக்கி பெருமை கொண்ட வடமராட்சியின் மாதனை என்ற கிராமத்தில் 30.03.1936இல் பிறந்த க. நா. கணபதிப்பிள்ளை சிறுவயதில் இருந்தே காலச் சூழ்நிலையுடன் இயல்பாகவே அமைந்த இசைத்துறை ஈடுபாடும் சேர இசைத்துறையையும் கிராமிய இசையையும் வாய் மொழிமூலமாகவும், குருசீட முறையிலும் கற்றுத்தேர்ந்து வந்தார்.

அவரது இசை, நாடகத்துறையின் மீதானஈடுபாட்டின் காரணமாக பின்னாளில் சிறந்த நாடக நடிகராகவும், தலைசிறந்த வில்லிசைக் கலைஞராகவும் புகழ்பெற்றுவிளங்கினார். வில்லிசையில் தனக்கென்று ஒரு பாணியை வகுத்துக்கொண்டு "வில்லிசை" என்றால் 'சின்னமணி' என்று கூறும் அளவுக்கு வில்லிசையோடு தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டவர்.

"சத்யவான் சாவித்திரி' கதைகூறும் 'தீர்க்க சுமங்கலி' என்ற நாடகத்தில் "இயமன்" பாத்திரம் ஏற்று உணர்வு பூர்வமாகவும், தத்ரூபமாகவும் நடித்ததனால் "யமன்" என்று அழைக்கப்பட்டார். இவரது நடிப்புத்துறை ஆற்றலின் காரணமாக "நந்தனார்", "இராவணேசன்" போன்ற இசை நாடகங்களிலும், கூத்துக்களிலும் முக்கிய பாத்திரமேற்று சிறந்த நடிகராகப் பெயர்பெற்று விளங்கினார். பிரபல வானொலி நடிகர் அமரர் 'சானாவின்' தூண்டுதலின் விளைவாக பல வானொலி நாடகங்களிலும் தனது முத்திரையைப் பதித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் பிரபல நகைச்சுவை நடிகர் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது, சுமார் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக அவருடன் பழகி, பல்வேறு நகைச்சுவை நுணுக்கங்களையும் கற்று விற்பன்னரானார். அவற்றினூடாக தனது இசைத்துறை மற்றும் நடிப்புத்துறை சார்ந்த ஆற்றல்களை வளர்த்துக் கொண்டமையால், திருப்பூங்குடி வி. எஸ். ஆறுமுகத்தின் வில்லிசைக் குழுவில் நகைச்சுவைப் பகுதி உதவியாளராக இணைந்து, பணியாற்றி வில்லிசையின் நுட்பங்களையும், தத்துவங்களையும் கற்றுத் தெளிந்தார். அதனூடாகப் பெற்ற அனுபவத்தின் விளைவாக தானாகவே "சின்னமணி வில்லிசைக் குழுவை" நிறுவி ஈழத்தின் பல இடங்களிலும் சென்று வில்லிசைகளை நிகழ்த்தி வந்தார்.

தனது வில்லிசையினூடாகப் பேரும் புகழும் பெற்ற வில்லிசைக் கலைஞர் க. நா. கணபதிப்பிள்ளை பின்னாளில் "சின்னமணி" என்றே அழைக்கப்பட்டு அதுவே அவரதுபெயராகவும் நிலைத்து விட்டது.

ஈழத்தில் மட்டுமல்லாது சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் கூடத் தனது வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்தி தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் தனக்கென அழியாப் புகழைப் பெற்றவர். ஒரு தடவை சிங்கப்பூரில் நடைபெற்ற இவரது வில்லிசை நிகழ்ச்சியைக் கண்டும், செவிமடுத்தும் மகிழ்ந்த பிரபல தென்னிந்திய இசைக்கலைஞரும் பின்னணிப் பாடகருமான ஜே. ஜே. யேசுதாஸ் மனந்திறந்து மேடையில் வைத்தே பாராட்டி உரைநிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் மூலைமுடுக்கெங்கும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தடவைகள் இவரது வில்லிசைகள் அரங்கேற்றப் பட்டுள்ளமை இவரது கலைத்துறை சார்ந்த விடா முயற்சியை எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வில்லிசை, உடுக்கிசை, நாடகம், கூத்து எனப் பல துறைகளிலும் அரும்பணியாற்றி வரும் **வில்லிசைக் கலைஞர் க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களைக் கௌரவிக்கு முகமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் 2003ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர்
## சண்முகம் சிவலிங்கம்




**12.09.1936** இல் கிழக்கிலங்கையின் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் சிவலிங்கம் அவர்கள் ஈழத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர்களில் ஒருவராக விளங்குகின்றார்.

கேரளப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டத்தை பெற்ற சண்முகம் சிவலிங்கம் ஆசிரிய சேவையில் தன்னை இணைத்து, அதிபராகப் பதவி உயர்வு பெற்றுக் கல்வித்துறையில் நீண்ட காலம் சேவையாற்றியவர்.

தமிழ் இலக்கிய ஆக்க முயற்சிகளில் மிகுந்த ஈடுபாடு காட்டிய சண்முகம் சிவலிங்கம், பல்வேறு இரசனை மிக்க கவிதைகளை எழுதியுள்ளார். 1967இல் "கவிஞன்" சஞ்சிகைகளில் இவரது கவிதைகள் வெளிவரத்தொடங்கிய பொழுதே ஈழத்துக் கவிஞர்கள் மத்தியில் பிரபல்யமாகப் பேசப்படத் தொடங்கினார்.

மரபுக் கவிதையூடாகத் தன்னை அடையாளப் படத்தத் தொடங்கிய கவிஞர் சண்முகம் சிவலிங்கம் புதுக்கவிதை முயற்சிகளிலும் தனக்கே உரித்தன ஒரு பாணியை வகுத்துக் கொண்டவர். "நீர் வளையங்கள்" என்னும் தலைப்பில் வெளியான இவரது கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து ஏராளமான கவிதைகளை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் துறையுடன் தனது இலக்கியப் பணியை நிறுத்திக் கொள்ளாது சிறுகதை, குறுநாவல்கள் என புனை கதை இலக்கியத் துறையிலும் தடம் பதித்துள்ள சண்முகம் சிவலிங்கம் அவர்கள் 30க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகளில் பல 'பிரகஸ்தம்' என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுதியாக வெளியிடப்படவுள்ளன.

இவரது 'காலடி' என்னும் குறுநாவல் "புதியகளம்" என்னும் இதழில் வெளிவந்து பலரதும் பாராட்டையும் பெற்றுள்ளது. கவிஞராகவும், புனைகதை இலக்கிய கர்த்தாவாகவும் விளங்கும் இவர், நல்லதொரு விமர்சகராகவும் தமிழ் இலக்கிய உலகில் அறிமுகமாகியுள்ளார். இவரது கவிதை சார்ந்த விமர்சனங்கள் மிகவும் இலக்கியத் தரம் மிக்கவையாகப் பேசப்பட்டு வருகின்றன.

சிறந்த ஆங்கிலப் புலமை மிக்க சண்முகம் சிவலிங்கம் கல்விச் சேவையில் இருந்து 60 வயதுடன் ஓய்வுபெற்ற பின் கலை இலக்கியத் துறையில் முழுமையாக ஈடுபட்டு வருகிறார். இவரது "வயலெற் ஒரேஞ்சஸ்" என்னும் சிறுகதை, "மொசாயிக்" என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

கடந்த 35 வருடங்களாக கல்வித் துறையிலும், ஆக்க இலக்கிய துறையிலும் அரும்பெரும் பணிகளை மேற்கொண்டு வரும் **கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்களை கௌரவிக்குமுகமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் 2003ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. மு. பொன்னம்பலம்




யாழ்ப்பாணம் புங்குடுதீவில் 26-08-1939 இல் பிறந்த திரு.மு.பொன்னம்பலம் ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளில் ஒருவர். சிறுவயதிலிருந்தே கவிதை, சிறுகதை எழுதுவதில் ஆர்வம் உடையவராய் இருந்தார். பத்திரிகைகளில் சிறுவர் பகுதிக்கு எழுதியவர் பின்னாளில் சிறுகதைகள், கவிதைகள் எழுதும் அளவிற்கு தனது எழுத்தாற்றலை வளர்த்துக் கொண்டார்.

இவரது முதலாவது கவிதைத் தொகுதியான "அது" 1968ல் தமிழ் நாட்டில் வெளிவந்தது. அதற்குப்பின் தொடர்ச்சியாக "விலங்கை விட்டெழும் மனிதர்கள்", "விடுதலையும் புதிய எல்லைகளும்", "காலில்லை", பொறியில் அகப்பட்ட தேசம்" என்ற கவிதைத் தொகுப்புகளும் "முற்றத்துப் பூக்கள்", "ஊஞ்சல் ஆடுவோம்" என்னும் இரண்டு சிறுவர் கவிதைத் தொகுப்புகளும் வெளிவந்தன.

அண்மையில் இவரது இலக்கிய முயற்சியாக "சூத்திரர் வருகை" என்ற கவிதை நூலை வெளியிட்டுத் தமிழ் கவிதை இலக்கியத் திற்குச் செழுமை சேர்த்துள்ளார்.

இவரது சிறுகதைத் தொகுதி ஒன்று "கடலும் கரையும்" எனும் தலைப்பில் வெளிவந்தது. "நோயில் இருத்தல்" என்ற நாவல் வடிவில் அமைந்த புதிய பரிசோதனை முயற்சி ஒன்றும் "திறனாய்வு சார்ந்த பார்வைகள்" என்ற விமர்சன நூலும் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பா நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார். பல்வேறு வடிவங்களையும் கையாண்டு ஓயாமல் எழுதிவரும் இவர் ஆங்கிலத்திலும் பல படைப்புக் களை எழுதியுள்ளார்.

இவர் ஒரு இதழாசிரியராகவும் தன்னை இனங்காட்டிக் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் எழுபதுகளில் இருந்து வெளிவந்த "சத்தியம்" எண்பதுகளில் வெளிவந்த "திசை" என்னும் இரண்டு வாரப் பத்திரிகை களுக்கும் பிரதம ஆசிரியராக இருந்தவர். "திசை" வார இதழினூடாக ஈழத்து இதழியல் துறைக்குப் புதிய பரிமாணத்தைப் பெற்றுக் கொடுத்த திரு. மு. பொன்னம்பலம் அவர்கள் பல புதிய எழுத்தாளர்கள் உருவாகக் காரணியாக இருந்தவர். திசை மூலமாக இவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கலை இலக்கியத் துறையிலும், இதழியல் துறையிலும் அரும் பணியாற்றி வரும் **திரு. மு.பொன்னம்பலம் அவர்களைக் கௌரவிக்குமுகமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் 2003ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. ஏ. ஜே. கனகரட்ணா**




**1938**இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த ஏ.ஜே. கனகரட்ணா தமிழ் இலக்கிய உலகில் ஏ.ஜே. என்ற இரண்டு எழுத்துக்களினால் கலை இலக்கிய வாதிகளின் உள்ளங்களில் தடம் பதித்தவர்.

தமிழ் இலக்கிய உலகின் திருமூலர் என்று 1970களில் மௌனியை வர்ணித்தும் எழுதியும், பேசியும் வந்த பல முன்னணி எழுத்தாளர்களையே அதிர்ச்சியடையச் செய்யும் வகையில், மௌனியின் எழுத்தைப் பற்றி துணிவுடனும் நிதானமாகவும் எழுதிப் பலரை விழிப்படைய வைத்த அவரது முதல் விமர்சனக் கட்டுரையான "மௌனி வழிபாடு" தமிழகத்தில் இருந்து வெளிவந்த "சரஸ்வதியில்" பிரசுரமானதுடன் பரவலாகப் பேசப்பட்ட 'ஏ.ஜே' ஒரு ஆங்கிலப் பட்டதாரியாவார். தனது பட்டப்படிப்பை முடித்து ஆங்கிலப் பத்திரிகை யின் ஆசிரியர் குழுவில் சிலகாலம் கடமையாற்றினார்.

ஈழத்தின் சிறந்த சிறுகதைகள் பலவற்றையும் தமிழகத்தில் ஜெயகாந்தன் போன்றவர்களின் சிறுகதைகளையும் மொழிபெயர்த்து ஆங்கில தினசரிகளின் வார வெளியீடுகளிலும். "இல்லஸ்ரேற் வீக்கி" யிலும் வெளியிட்டபோது ஏ.ஜே. யின் ஆங்கிலப் புலமையைக் கண்டு ஆங்கிலேயர்கள் பலராலும் புகழப்பட்டவர்.

ஏ.ஜே. யின் வழிகாட்டல்களினால் ஈழத்தில் பல எழுத்தாளர்கள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் தான் மௌனமாக இருந்து அழியா இலக்கியங்கள் பலவற்றப் படைத்து வருகின்றார். "சோக்கல்லோ கந்தையா" என்ற புகழ் பெற்ற கதாபாத்திரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்ட கதை பிறக்க ஏ.ஜே.யின் ஆலோசனைகளே காரணம் என டொமினிக்ஜீவா குறிப்பிட்டது அவரது இலக்கிய வீச்சைப் புலப்படுத்துகின்றது.

ஏ.ஜே. யின் எழுத்துக்களையும் அவற்றில் இளையோடும் தத்துவ நோக்குகளையும் பழக்க விரும்புபவர்கள் 1970இல் வெளிவந்த "மத்து" கட்டுரைத் தொகுதியைப் படித்துப் பார்க்க வேண்டும். அவரது விமர்சனப் பாங்கு நிறைந்த கட்டுரைகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட "மத்து" கட்டுரை இலக்கியம் என்றால் என்ன என்பதற்கான சான்றாக விளங்குகின்றது.

"மத்து தொகுதியைத் தொடர்ந்து, 1980இல் "மாக்கியமும் இலக்கியமும்" என்ற விமர்சனக் கட்டுரைத் தொகுதியும், 2000ஆம் அண்டில் "செங்காவற் தலைவர் யேசுநாதர்" என்ற விமர்சனங்களின் தொகுப்பும் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டன. "கலையைச் சுவைத்தல்" என்னும் நூல் வெளிவர இருக்கின்றது. 2002ஆம் ஆண்டில் கனடாவில் வெளிவந்துள்ள "லூட்சோல் அன்ட லாமொன்றிஸ்" என்னும் ஈழத்துப் படைப்பாளிகளின் ஆங்கில மொழிபெயர்ப்புத் தொகுப்பில் ஏ.ஜே. கனகரட்ணா அவர்களின் பங்களிப்பு கணிசமானதாக இருந்தது.

1970இல் தமிழகத்துச் சஞ்சிகைளையும் நூல்களையும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்காகத் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபொழுது, அதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்த ஒரேயொரு மூத்த எழுத்தாளன் ஏ.ஜே. கனகரட்ணாவேதான். அதுமட்டுமல்லாது அப்போதைய கலாசார அமைச்சரைச் சந்திக்கச் சென்ற தூதுக்குழுவினரால் கையளிக்கப்பட்ட கனதியும், கருத்தும் நிறைந்த ஆங்கில அறிக்கையும் அவராலேயே தயாரிக்கப்பட்டிருந்தது.

கடந்த 25 ஆண்டுகளாக பத்திரிகைத் துறையிலும் விமர்சனத்துறையிலும், ஆங்கில மொழியாக்கக் கலையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கும் **திரு. ஏ.ஜே. கனகரட்ணா அவர்களை கௌரவிக்குமுகமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் 2003ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவலர்**
**பளீல் காரியப்பர்**




**9.5.1940** இல் பிறந்த மொகஹம்மட் சுபைர் மொஹம்மட் பளீல் காரியப்பர் கிழக்கிலங்கையின் சம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும், கல்முனையை வாழ்விடமாகவும் கொண்டவர். ஈழத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர்களில் ஒருவர்.

பாத்திமா கல்லூரியில் கல்வி கற்கும் வயதிலேயே கவிதை எழுதுவதில் ஈடுபாடுடையவராக இருந்தவர். 1960ல் இருந்து இவரது படைப்புக்கள் பிரசுரம் பெறத்தொடங்கின.

1962ல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடாத்திய தங்கத்தாத்தா சோ. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நினைவுக் கவிதைப் போட்டியில் தனது 22 வது வயதில் கலந்து கொண்டு "உயிர்" என்ற கவிதைக்கான 3வது இடத்தைப் பெற்றவர். அப்பொழுது இவருக்கு வயது 22. அதன் பின்னர் 1978ல் கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் 'தங்கம்மா' என்ற இவரது கவிதைக்கு 1வது பரிசைப் பெற்றார். இவ்வாறாக

இவர் எழுதிய கவிதைகளின் சிறப்பிற்காக இவரது ஊர்மக்கள் இவரைப் பாராட்டி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுடைய தலைமையில் "பாவலர்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் 2001ல் இவரது கவிதைகளின் தொகுதி ஒன்றை "ஆத்மாவின் அலைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டது.

இவரது மெல்லிசைப் பாடல்கள் பலவற்றை ஈழத்துப் பாடல்கள் என்ற வரிசையில் இலங்கை வானொலி ஒலிபரப்பியது. இவரால் எழுதப்பட்டு, ஈழத்தின் சிறந்த இசையமைப்பாளரான றொச்சாமியினால் இசையமைக்கப்பட்டு, அமரர் எஸ். கே. பரராசசிங்கம் அவர்களால் பாடப்பட்ட "அழகான ஒரு சோடி கண்கள்...." என்ற பாடல் இன்றைக்கும் எம் செவிகளுக்கு இனிமை தந்துகொனண்டிருக்கிறது. எம். ஏ. குலசீலநாதன் பாடிய "நீ ஒரு அரசி.." "எதுவாகிலும் வரட்டும் நெஞ்சே எதிர்கொள்....." என்ற இவரது பாடல்களும் இன்றும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

இவர் பல இஸ்லாமிய கீதங்களையும் எழுதியுள்ளார். "கயிற்றோசை கேள் மகளே, தொட்டில் கயிற்றோசை கேள் மகளே...." எனும் இவருடைய இஸ்லாமியகீதம் மிகவும் பிரபல்யமானது. உருவகக்கதைகள் எழுதுவதிலும் வல்ல இவரதுகதைகள் பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் அவ்வப்போது வெளிவந்தன.

ஆக்க இலக்கியத் துறையிலும், இசைத் துறையிலும் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணியாற்றி வரும் **பாவலர் பளீல் காரியப்பர் அவர்களைக் கௌரவிக்குமுகமாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சினால் 2003ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை,
இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org